மாண்புமிகு சார்பு நீதிமன்றம், மானாமதுரை

**O.S. No. 115/2019**

2023ம் ஆண்டு ஜுன் மாதம் 8-ஆம் தேதி வியாழக்கிழமை

பி.வா.சா.5 சேகர்

கு.வி: (வாதி தரப்பில்)

இந்த வழக்கில் 2வது இலக்க சொத்தை பொறுத்து மட்டும்தான் எதிர்வாதம் செய்கிறேன் என்றால் சரிதான். மற்ற இலக்க சொத்துக்களை பொறுத்து வாதிகள் கோரும் பாகம் கொடுக்க எனக்கு ஆட்சேபனை இல்லை என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.13 மூலமாக 2வது இலக்க சொத்தின் ஒரு பகுதியை பொன்னுச்சாமியின் மூத்த தாரத்து மகன் முத்துராமன் சேர்வை அவரது மைனர் மக்களை கட்டுப்படுத்தி கிரையம் வாங்கியுள்ளேன் என்றால் சரிதான். சர்வே எண் 189/2021 ன் மொத்த விஸ்தீரணம் தெரியுமா என்றால் தெரியாது. அதன் மொத்த விஸ்தீரணம் 6 செண்டு என்றால் எனக்கு தெரியாது. சர்வே எண் 189/2021ன் வடக்கு பகுதியில் தான் நான் கிரையம் வாங்கியுள்ளேன் என்றால் சரிதான். எனது தம்பி முத்துச்சாமியும் பொன்னுச்சாமியின் மூத்த தாரத்து மகன் முருகேசன் என்பவரிடம தாவா 2வது இலக்க சொத்தின் ஒரு பகுதியை கிரையம் வாங்கியுள்ளார் என்றால் சரிதான். எனது தம்பி மொத்த சொத்தில் தெற்குபக்கத்தில் கிரையம் வாங்கியுள்ளார். பொன்னுச்சாமியின் மூத்த தாரத்து மக்கள் 20 வருடங்களுக்கு முன்னரே மொத்த சொத்தில் ஒரு பகுதியை பிரித்து வாங்கிக்கொண்டு விலகிக்கொண்டார்கள் என்றால் சரிதான். எனது தம்பி வாங்கிய சொத்து 2ம் இலக்க சொத்தின் தெற்குபகுதியில் இல்லை என்றும் வடக்குபகுதியில் தான் அவர் கிரையம் வாங்கியுள்ளார் என்றால் சரியல்ல. நான் வீடுகட்டியுள்ளது முத்துராமனிடம் இருந்து கிரையம் வாங்கிய சொத்தில் தான் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.13 மூலமாக கிரையம் வாங்கிய சொத்தின் பிளான் அப்ருவல் தான் பி.வா.சா.ஆ,15. மேற்படி சொத்தை அடமானம் வைத்துதான் வீடு கட்டியுள்ளேன் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.14 மூலமாக பொன்னுசாமி மகன் இளையதாரத்து மகன் முத்துராஜாவிடமிருந்து இரண்டாவது இலக்கத்தின் ஒருபகுதியை கிரையம் வாங்கியுள்ளேன் என்றால் சரிதான். இளையதாரத்து மக்கள் அவர்களுக்குள் பாகம் பிரித்துக்கொண்டார்களா என்ற

விபரம் எனக்கு தெரியுமா என்றால் பாகம் பிரித்துக்கொண்டதாக என்னிடம் சொன்னார்கள். என்னிடம் பாகப்பத்திரம் எதுவும் காண்பித்தார்களா என்றால் இல்லை. எந்த தேதியல் பாகம் பிரித்தார்கள் என்றும் அவர்களுக்குள் எந்தெந்த இடங்கள் யார் யாருக்கு ஒதுக்கப்பட்டது என்ற விபரங்களை பி.சவா.வா.14, 15 ல் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். எனது தம்பி வாங்கிய சொத்துக்களும் அவர் கிரையம் வாங்கிய பொன்னுச்சாமியின் மக்கள் தங்களுக்குள் பாகம் பிரித்துக்கொண்டார்களா என்ற விபரம் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். வீட்டுவரி, மின் இணைப்பு ஆகியவை பி.வா.சாஆ.13ல் கண்ட சொத்துக்களுக்குரியது என்றால் சரிதான். முத்துராஜாவிடமிருந்து நான் பி.வா.சா.ஆ.14 மூலமாக வாங்கிய சொத்து காலியிடமாகத்தான் உள்ளது என்றால் சரிதான். அந்த இடத்தில் வீடு கட்ட நான் முயற்சித்ததாக என்மீது காவல் துறையில் புகார் கொடுத்து நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. 2ம் இலக்க மொத்த சொத்தும் இன்றைய தேதிவரை உட்பிரிவு செய்யப்படாமல் பொன்னுச்சாமி பெயரில் தான் பட்டா உள்ளது என்றால் சரிதான். வாதி சரோஜா வாய்பேச முடியாத காது கேளாத மாற்றுத்திறனாளி என்று சொன்னால் சரிதான். மொத்த சொத்தில் பொன்னுச்சாமியின் மூத்த தாரத்து மக்கள் 20 வருடங்களுக்கு முன்னரே பாகம் பிரித்து சென்றுவிட்டார்கள் என்றும் ஆனால் இளையதாரத்து மக்களிடம் இன்று வரை பாகம் பிரிக்கப்படாமல் உள்ளதால் முத்துராஜாவிடம் இருந்து கிரையம் பெற்ற சொத்தை வாதி ஆட்சேபனை செய்கிறார் என்றால் சரியல்ல.

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சியம் சொல்ல என்னால் கேட்கப்பட்டு தட்டச்சருக்கு கூறி அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது

சார்பு நீதிபதி
மானாமதுரை